திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்குப் பரிசுகள் தற்போது வழங்கப்படுகின்றன. இதைத் தவிர அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுத்தால் தமிழகம் முழுவதும் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு மேலும் பல நல்ல ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக வாய்ப்பு இருக்கும். இதை அரசாங்கம் பின்பற்றுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஊராட்சி ஒன்றியங்களில் சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசு வழங்கப்படுகிற நிலையில் சில ஊராட்சி ஒன்றியங்கள் பெரிதாகவும் எண்ணிக்கையில் அதிகமான ஊராட்சிகளைக் கொண்டதாகவும், சில குறைந்த ஊராட்சிகளைக் கொண்டதாகவும், மற்றும் பண வசதி போன்றவற்றிலும் வேறு வேறு மாதிரியான நிலைமையிலிருக்கும்போது பரிசு வழங்கும் போது இவற்றை யெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு செயல்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு மதிப்பெண்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

வேளாண்மை 25 ; கால்நடை மற்றும் மீன்வளம் 10 ; சிறு பாசனம் 5 ; கல்வி 5 ; சமுகக் கல்வி 10 ; மகளிர் மற்றும் குழந்தைகள் திட்டம் 10 ; கூட்டுறவு 5 ; கிராமத் தொழில் 5 ; கிராம வேலைத் திட்டம் 15 ; மற்றவை 10—ஆக மொத்தம் 100.

இந்த மார்க்குகள் விகிதாசாரப்படி ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

Subsidy for electricity charges to Panchayats

*183 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have examined the proposals to offer subsidy to the Panchayat Unions in the State for their power consumption; and

(*b*) if so, the details thereof ?

1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஊராட்சிகள் தாம் பயன் படுத்தும் மின்சாரத்திற்கான கட்டணங்களுக்காகும் தொகையைச் செலுத்தும் பொருட்டு, அவற்றுக்கு மின்சாரக் கட்டணங்களில் 75 சதவிதத்தை உதவித் தொகையாகக் கொடுக்குமாறு தமிழ்நாடு ஊராட்சிகள் சங்கம் அரசைக் கேட் டுள்ளது.

(இ) அரசு, இவ் வேண்டுகோளைப் பரிசீலித்த பின்னர் அதனை ஏற்க இயலாதென்று தமிழ்நாடு ஊராட்சிகள் சங்கத்திற்குத் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. என். டென்னிஸ் : பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கும் ஊராட்சிகளுக்கு இதில் பங்கு கிடைக்குமாதலால் இந்த உதவித் தொகை அளிப்பதில் இருந்து ஊராட்சிகளில் தெரு விளக்குகளை விஸ்தரிக்க அது உதவி யாக இருக்குமல்லவா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சிறப்பாக ஒன்றியங்களில் பெரும் பாலும் எரிகிற, எரியாதவற்றிற்கும் கூட கணக்கெடுக்கப்பட்டு இன்றையதினம் ஆங்காங்கு ஒன்றியங்களிலிருந்து மீட்டர்கள் பொருத்தலாமா என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப் பொருத்திவிட்டால் இது மிகவும் குறையும் என்று கருதப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கழிந்த மாதம் கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சில பஞ்சாயத்துக்களில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான கேள்வி. எனவே குறிப்பிட்ட இடத்தைப் பற்றிக் கேட்டால் அமைச்சர் அவர்களிடம் விடை யிருக்காது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பொதுவாகக் கேட்கிறேன். கழிந்த மாதம் ஏதாவது மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலிருந்து மின்சார சார்ஜஸ் செலுத்த வசதி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அரசுக்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ? அப்படி வந்திருந்தால் அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தகவல் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.